**ஜூன் 22 ஆம் தேதி முதல் பெரும்பாலான பேருந்து முனையங்களில் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து வாடிக்கையாளர் சேவை கவுன்ட்டர்கள் திறக்கப்பட இருக்கின்றன**

ப்ராம்ப்ட்டன், ON (ஜூன் 19, 2020) – ப்ராம்ப்ட்டன் நகரம் பொதுமக்களுக்காக மீண்டும் திறக்கப்பட்டு, மீட்சி பெறுவதற்கான திட்டத்தின் ஒரு அங்கமாக, ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்தின் ப்ரமீலியா, ப்ராம்ப்ட்டன் கேட்வே மற்றும் டவுண்டவுன் பேருந்து முனையங்களில் வாடிக்கையாளர் சேவை மையங்கள் மீண்டும் திறக்கப்படும். ட்ரினிட்டி காமன் டெர்மினல் ஆனது உடல்ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிப்பதற்குப் போதுமான இடவசதி இல்லமையால் மூடப்பட்டே இருக்கும்.

ப்ராம்ப்ட்டன் பேருந்து முனையங்களில் குறைந்த அளவே இட வசதி இருப்பதன் காரணமாக, பின்வரும் பேருந்து முனையங்களில் பரிவர்த்தனைகளுக்காக வாடிக்கையாளர் சேவை மையங்களும், பயன்பாட்டிற்காக கேட்வே ஆன் தி கோ (Gateway on the Go) மற்றும் கழிப்பறைகள் திறந்திருக்கும்.

வாடிக்கையாளர் சேவை மைய கவுன்ட்டர்கள் செயல்படும் நேரங்கள் பின் வருமாறு:

**ப்ரமீலியா முனையம்**

- திங்கள் முதல் வெள்ளி வரை: காலை 6 முதல் இரவு 8 மணி வரை
- சனிக்கிழமை: காலை 9 மணி முதல் மாலை 6 மனி வரை
- ஞாயிற்றுக்கிழமை: முற்பகல் 11 மணி முதல் மாலை 6 மணி வரை

**ப்ராம்ப்ட்டன் கேட்வே முனையம்**

- திங்கள் முதல் வெள்ளி வரை: காலை 6 முதல் இரவு 8 மணி வரை
- சனிக்கிழமை: காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை
- ஞாயிற்றுக்கிழமை: முற்பகல் 11 மணி முதல் மாலை 6 மணி வரை

**டவுண்டவுன் முனையம்**

- திங்கள் முதல் வெள்ளி வரை: காலை 7 முதல் மாலை 7 மணி வரை
- சனிக்கிழமை: காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை
- ஞாயிற்றுக்கிழமை: மூடப்பட்டிருக்கும்

நகர நிர்வாகமானது சமுதாயத்தின் உடல் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை, அதுவும் குறிப்பாக கோவிட் – 19 தொற்று பரவல் காலத்தில், மிகத் தீவிரமான விஷயமாக கருதுகிறது. வாடிக்கையாளர்

சேவை மைய கவுன்ட்டர்கள் மீண்டும் திறக்கும்போது பின்வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் அமலில் இருக்கும்.

- உடல்ரீதியான சமூக இடைவெளியாக 2 மீட்டர் தூரம் கடைப்பிடிக்கப்படும். வாடிக்கையாளர் சேவை மைய கவுன்ட்டர்களுக்கான வரிசையில் காத்திருக்கும்போது, 2 மீட்டர் தூரம் ஒருவருக்கொருவர் தள்ளியே இருக்கவேண்டும்; இது பற்றி வலியுறுத்தும் வகையில், அறிவிப்பு பலகைகள் வைக்கப்படும்.
- பேருந்து முனையங்களில் உடல்ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்துரைக்கவும் பயணிகளுக்கு நினைவூட்டவும் தனி பணியாளர்கள் இருப்பார்கள்.
- ஒவ்வொரு முனையமும் உள்நுழைய மட்டுமே, மற்றும் வெளியேறுவதற்கு மட்டுமே, என தனித்தனி வாசல்களைக் கொண்டிருக்கும், இது அனுமதிக்கப்படும் இடங்களில் மட்டுமே இப்படி இருக்கும்
- வாடிக்கையாளர் சேவை மைய கவுன்ட்டர்கள் மற்றும் பின் பேட்கள் (pin pads) மீது அடிக்கடி கிருமிநாசினி தெளிக்கப்படும்.

மூத்தகுடிமக்கள் போக்குவரத்து செய்வதற்கான வசதியளிப்பதுவே நகர நிர்வாகத்தின் முன்னுரிமை கொண்ட விஷயமாகும்; இதில் கோவிட்-19 தொற்றுபரவலின் தாக்கமும் சேர்ந்திருக்கும் சமயத்தில், மூத்தகுடிமக்களுக்கான, செயல்பாட்டில் இருக்கின்ற, ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அடையாள அட்டைகளின் காலாவதி தேதி காலவரையின்றி ஒத்தி வைக்கப்படுகிறது.

*க்ளார்க்* மற்றும் *சாண்டல்வுட்* பேருந்து முனைய கட்டிடங்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மூடப்பட்டே இருக்கும்.

**சரக்கிருப்பு தீரும் வரை பேருந்து பயணிகளுக்கு இலவச முகக் கவசங்கள்**

ப்ராம்ப்ட்டன் நகரை பொதுமக்களுக்காக மீண்டும் திறந்துவிடுதல் மற்றும் மீட்சி பெறுவதற்கான நடவடிக்கையின் முதல் அடியாக, சரக்கிருப்பு தீரும் வரை தனது பயணிகளுக்கு மருத்துவம்-அல்லாத 100,000 இலவச முகக் கவசங்களை ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து நிர்வாகம் வினியோகிக்கும். மருத்துவம்-அல்லாத இந்த இலவச முகக் கவசங்களை, ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து நிர்வாகத்தின் ப்ரமீலியா, ப்ராம்ப்ட்டன் கேட்வே மற்றும் டவுண்டவுன் முனையங்களில் ஜூன் 22 இல் முடிகின்ற வார இறுதியில் நிர்வாகத்தினால் வினியோகிக்கப்படும்.

**பேருந்துக் கட்டணம் செலுத்துதல், முன் வாசல் வழியாக பேருந்தில் ஏறுதல் மற்றும் மருத்துவம் அல்லாத முகக் கவசங்கள் –ஜூலை 2 முதல் அமல்படுத்தல்**

ஜூலை 2 ஆம் தேதி வியாழக்கிழமை துவங்கி பேருந்துக் கட்டணம் செலுத்துதல் மற்றும் முன் வாசல் வழியாக பேருந்தில் ஏறுதல் ஆகியவை மீண்டும் செயல்பாட்டுக்கு கொண்டுவரப்படும். பீல் பப்ளிக் ஹெல்த் மற்றும் ஒன்ட்டேரியோ அரசாங்கம் ஆகியவற்றின் கண்டிப்பான பரிந்துரையின் பேரில் பொதுப் போக்குவரத்து பேருந்து பயணிகள் முகக் கவசம் அணிவது கட்டாயம் என்பதால், பயணிகள் பேருந்துகளிலும் பேருந்து முனையங்களிலும் இருக்கும்போது மருத்துவம்-அல்லாத முகக் கவசம் அணிவது ஜூலை 2 ஆம் தேதி முதல் கட்டாயமாகும்.

முகக் கவசம் அணிவது கட்டாயம் எனும்போது, இளம் குழந்தைகளும் முகக் கவசம் அணிய இயலாத மாற்றுத்திறனாளிகள் மற்றும் இதர மருத்துவ நிலைமை கொண்டவர்கள் இதை அணியத் தேவையில்லை.

தொடுதல் இல்லாத வகையில் பணம் செலுத்துவதற்காக பயணிகள் தங்களின் ப்ரெஸ்ட்டோ (PRESTO) கார்டு பயன்படுத்தி பேருந்து கட்டணம் செலுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். இன்னமும் ரொக்கப்பணம் செலுத்திக்கொண்டிருக்கும் பயணிகள் வாடிக்கையாளர் சேவை கவுன்ட்டர்களில் இருந்து ப்ரெஸ்ட்டோ (PRESTO) கார்டு பெற்றுக்கொள்ள உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். ஜூன் 22 ஆம் தேதி துவங்கி குறிப்பிட்ட சில காலம் மட்டுமே $6 ப்ரெஸ்ட்டோ (PRESTO) கார்டுக்கான கட்டணத்தை நாங்கள் தள்ளுபடி செய்யவிருக்கிறோம்.

**கோவிட்- 19 தொற்று பரவலுக்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகள்**

முகக் கவசம் அணிந்திருந்தாலும் கூட, பேருந்துகள், முனையங்கள் மற்றும் பஸ் நிறுத்தங்களில் பயணிகள் ஒருவருக்கொருவர் குறைந்தது 2 மீட்டர் (6 அடி) இடைவெளி விட்டு தொடர்ந்து உடல் ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிக்குமாறு நகர நிர்வாகம் பயணிகளைக் கேட்டுக்கொள்கிறது. பேருந்து பயணியர் தங்கள் கைவசம் தமது உபயோகத்திற்காக இதுபோன்ற கிருமி நாசினி, கைகளைக் கழுவும் சுகாதார பொருட்களை வைத்திருந்து தங்கள் கைகளை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் மற்றும் இருமுதல், தும்முதலின்போது தங்கள் முழங்கைகளில் முகம் புதைத்து இருமவோ தும்மவோ செய்யும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத் தூய்மைப்படுத்தி அவற்றில் கிருமிநாசினி தெளிக்கும் வேலை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு 48 மணிக்கொரு முறை பேருந்துகளின் அனைத்து பரப்புகள், இயக்குபவர் அமருமிடம் மற்றும் அனைத்து இருக்கைகளையும் கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைப்பதே ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையின் இலக்காகும். தற்சமயம் பெரும்பாலான பேருந்துகளில் 24 மணி நேரத்திற்கு ஒருமுறை கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றன. பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும்.

பீல் ப்ப்ளிக் ஹெல்த் அமைப்பின் வழிகாட்டுதல்களுடன், ப்ராம்ப்ட்டன் நகர வாசிகள் ஒவ்வொருவரும், குறிப்பாக, உடல்ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிப்பது சற்று சவாலான விஷயமாக இருக்கும் இடங்களில்,  மருத்துவம் அல்லாத முகக் கவசங்களை அணிய உற்சாகப்படுத்துகிறது. ஆபத்துக்களை தொடர்ந்து கண்காணிப்பதற்காக, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் பீல் பப்ளிக் ஹெல்த் மற்றும் ப்ராம்ப்ட்டன் அவசரநிலை மேலாண்மை அலுவலகம் ஆகியவற்றுடன்  நெருக்கமாக செயல்படுகிறது. வழக்கமான புதுப்பிப்புகளுக்கு www.brampton.ca/covid19  ஐப் பார்வையிடவும், www.bramptontransit.com க்கு வருகை தரவும்  அல்லது சேவை புதுப்பிப்புகளுக்காக ட்விட்டரில் @bramptontransit ஐப் பின்பற்றவும். கேள்விகள் ஏதுமிருப்பின் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பின் தொடர்பு மையத்தை 906.874.2999 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca